JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-1- Witness
for Prosecution

STC No. 321/2022 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | **PW1– சீனிவாசன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 21.05.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரி என்னிடம் கடன் கேட்டதாக சொல்லப்படும் தேதியில், நான் எதிரிக்கு பணம் கொடுக்காததற்கான காரணம் என்னவென்றால் அன்றைய தினம் என்னிடம் பணம் இல்லை 18.01.2022ம் தேததியன்று தருவதாக கூறியிருந்தேன். 05.01.2022 முதல்18.01.2022 வரை கொரோனா அதிகம் இருந்த காலம் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. 05.01.2022 முதல்18.01.2022 வரை தமிழ்நாடு அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருந்தது என்றால், தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 05.01.2022 முதல்18.01.2022 வரை எவ்வாறு நான் பணத்தை தயார் செய்தேன் என்கிற விவரத்தை நான் தாக்கல் செய்த புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான்.

கடந்த 18.01.2022 நான் தகவல் கொடுத்ததன் அடிப்படையில் தான் எதிரி வந்து பெற்றுக் கொண்டதாக எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் எதிரி கோயம்புத்தூரில் இருந்து நாமக்கல்லிற்கு எவ்வாறு வந்தார் என்றால், அந்த சமயத்தில் எதிரி பவானியில் தான் இருந்தார். நான் தாக்கல் செய்த புகார், சட்டஅறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் எதிரி பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியில் பவானியில் தான் இருந்தார் என்பதை குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால், சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை எனது வருமானவரி கணக்கில் காட்டவில்லை என்றால், சரிதான். 18.01.2022–ம் தேதிக்கு முன்பு வேறு நபர்களுக்கு பணம் கைமாற்று கடனாக கொடுத்து திரும்பப் பெற்றுள்ளேன் என்றால், இல்லை. நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் 18.01.2022–ம் தேதி என்னிடம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.21 05:38:15 +0530

பணம் இல்லை என்றாலும், நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்று கூறுவது பொய் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையினாலும், காசோலையில் நிரப்பப்பட்ட விபரங்கள் வேறொரு மையினாலும் உள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு காசோலைக்கு சட்டப்படியான மறுபயன் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. எனது தங்கை சத்தியப்பிரியா ஆஜர் எதிரியின் மனைவி பிரதீபா மீது STC 322/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான்.

மேலும் நான் சொல்வது தவறு என்றாலும், எனது தங்கையின் கணவர் அன்பழகனால் நடத்தப்பட்ட பதிவு செய்யாத ரூ.30,00,000/- சீட்டில் 2018 ஆம் ஆண்டு எதிரி கலந்து கொண்டார் என்றாலும், அந்த சீட்டின் முதல் ஏலம் 15.05.2018 ஆம் தேதி ஆரம்பமானது என்றாலும், எதிரி இரண்டாவது ஏலச்சீட்டில் கடந்த 15.07.2018ம் தேதி எதிரி சீட்டு ரூ.18,86,000/- க்கு ஏலம் எடுத்தார் என்றாலும், மேற்படி பணத்திற்கு பாதுகாப்பிற்காக பூர்த்தி செய்யப்படாமல் எதிரியால் காசோலை அன்பழகனுக்கு கொடுக்கப்பட்டது என்றாலும், மேற்படி ஏலச்சீட்டு தொகையை எதிரியால் திரும்ப செலுத்தப்பட்டது என்றாலும், மேற்படி ஏலச்சீட்டுக்கு பின்னிட்டும் அன்பழகனிடம் இருந்த பூர்த்தி செய்யாத காசோலையை எனது பெயரில் மோசடியாக நிரப்பி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. புகார் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.21 05:38:21 +0530

**Sd/- (J.RAJKUMAR)**

**Judicial Magistrate No.1, Bhavani**